**வலபனே பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலபனே பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலபனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 101,500 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தவறுகளை இனங்கண்டு சீராக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 826,200 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கழிவுப்பொருள் சலிக்கும் இயந்திரம் மற்றும் காணி கட்டிடங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவத்ற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கில் நீண்டகாலமாக கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் காணப்பட்ட ரூபா 24,573 ஆன மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீராக்கம் செய்வதற்கு அறிவுறுத்துவதாக | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 118 | சபையில் சேவையை விட்டுச்சென்ற, இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த 31 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியதாக காணபபட்ட மொத்தம் ரூபா 1,916,101 ஆன கடன் தொகையை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1988 மே 17 ஆந் திகதிய 1998/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதவரி அறவிடப்படும் ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு வரி அறவிடப்பட்டு வந்தது. | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 2016 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,506,562 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,674,486 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| i. | 10 ஆண்டு முதல் 33 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் காணப்படும் ரூபா 1,508,163 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவில் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி வரி எல்லையை தீர்மானிப்பதற்கு உரிய தகவல்கள் சபையில் இல்லாமையால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதெனவும் நிலுவை தொகையை பதிவழிப்பதற்கு கோரப்பட்டிருந்த போதும் அங்கீகாரம் கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் இறுதியில் ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம் 27 காணிகளில் இருந்து ரூபா 61,271 ஆன ஏக்கர் வரி தொகை அறவிடப்பட வேண்டியதுடன் 2021 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு மேலும் ரூபா 45,456 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | சபைக்குச் சொந்தமான 34 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,802,753 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியுள்ளது அதில் 10 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 1,024,110 தொகை 01 ஆண்டு முதல் 05 ஆண்டு காலமாக நிலுவையாக காணப்பட்ட போதும் இரண்டு கடைகளுக்காக மாத்திரம் வழக்கு தொடரப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | மீளாய்வாண்டில் ராகல் நகரில் மோட்டார் வாகன நிறத்துமிடத்திற்கான கட்டணங்களை அறவிடல் சபையால் நேரடியாக மேற்கொள்ளாமல் கேள்வி | இதற்காக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மூலம் நபரொருவருக்கு ரூபா 410,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 227,500 தொகை சபைக்கு செலுத்தாமல் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை நிலுவையாக காணபபட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 24,564,253 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 860,452 தொகை 04 ஆண்டுகள் காலமொன்று கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 29,284,030 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,598,583 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் தீர்வுசெய்வதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கவனம் செலுத்தி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தீர்வு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறநெகும நிகழ்ச்சித்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு மீளாய்வாண்டு வரை ரூபா 30,554,104 தொகை செலவிடப்பட்டு கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி அளவில் இயந்திரங்கள், பொறிகள் பொருத்தப்பட்டு காணப்பட்டன. சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக நீண்டகால அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் இல்லாமை, மீளாய்வாண்டில் நிகழ்ச்சித்திட்டற்கள் தொடர்பாக சுற்றாடல் திட்டமொன்று நிர்மாணிக்கப்படாமை காரணமாக கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக இடம் பெற்றிருக்கவில்லை. பிரதேசத்தில் ஒரே தடவையாக சேரும் கழிவுகள் ராகல் பிரதேசத்தில் காணியொன்றில் இடுவது மாத்திரம் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த கொரோனா நிலைமையுடன் படிப்படியாக கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டத்தை செயற்படுத்த முடியாத தால் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டுமும்.க வேண்டும். |